செய்தி வெளியீடு எண் : 086 நாள் : 12.01.2023

**செய்தி வெளியீடு**

கலை பண்பாட்டுத் துறையால் நடத்தப்பெறவுள்ள சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவின் ஓர் அங்கமாகத் தமிழ் வளர்ச்சித்துறையால் நடத்தப்பெறும் "இலக்கியச் சங்கமம்" நிகழ்ச்சிகள் சென்னை அடையாறு , இராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் 2023 சனவரித் திங்கள் 14–ஆம் நாள் முதல் 17–ஆம் நாள் வரை நடைபெறவுள்ளன.

14.01.2023–ஆம் நாள் சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று உரையாற்ற உள்ளார்கள். தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்க உள்ளார்கள். சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச்செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் தலைவர் டாக்டர்.பி.சந்திர மோகன்., இ.ஆ.ப அவர்களும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ்., இ.ஆ.ப அவர்களும் முன்னிலையுரையாற்ற உள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ். ஜெகத்ரட்சகன் அவர்களும் தோழர் சு. வெங்கடேசன் அவர்களும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் திரு.ம.ராஜேந்திரன் அவர்களும் சிறப்புரையாற்றிட உள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு.த.வேலு அவர்கள் முன்னிலையுரையாற்ற உள்ளார்கள். கவிஞர் இளையபாரதி அவர்கள் இந்நிகழ்வில் வரவேற்புரையும், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந.அருள் அவர்கள் நன்றியுரையும் வழங்க உள்ளனர்.

15.01.2023–ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி அளவில் திரு. பவா. செல்லத்துரை அவர்களின் 'பெருங்கதையாடல்' நிகழ்வும், மாலை 6 மணி அளவில் திரு. பீ. லெனின் அவர்களின் தலைமையில் "மாற்று சினிமா குறித்து யோசிப்போம்" என்னும் பொருண்மையிலான நிகழ்வும் நடைபெறும். இதில் இயக்குநர்கள் திரு. ராஜேஸ்வர், திரு. பி.சி.ஸ்ரீராம், திரு. மிஷ்கின், திரு. த.செ.ஞானவேல் மற்றும் திரு. தியாகராஜன் குமாரராஜா ஆகியோர் உரையாற்ற உள்ளார்கள்.

16.01.2023–ஆம் நாள் திங்கள்கிழமை மாலை 4 மணியளவில் மாநிலத் திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு. ஜெ.ஜெயரஞ்சன் அவர்களின் தலைமையில் "திராவிட இயக்க இலக்கிய இயல்" குறித்துக் கல்லூரி

மாணவர்களோடு ஓர் உரையாடல் நிகழ்வு நடைபெறும். இதில் திரு.க.திருநாவுக்கரசு, திரு.ஏ.எஸ்.பன்னீர்செல்வன், எழுத்தாளர் இமையம், பேராசிரியர் அ.ராமசாமி, திரு.ந.முருகேச பாண்டியன், கவிஞர்அறிவுமதி, திரு.கோவி லெனின், திருமதி.சந்தியா நடராஜன் ஆகியோர் உரையாற்ற உள்ளார்கள். மாலை 6 மணி அளவில் திரு. எஸ். ராமகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் நாவல் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இதில் திருமதிதிலகவதி, திரு.ஜோடிகுருஸ்,திரு.சு.வேணுகோபால்,திரு.பா.வெங்கடேசன், திரு.முத்துநாகு, திரு.கோபாலகிருஷ்ணன், திருமதி அ.வெண்ணிலா ஆகியோர் உரை நிகழ்த்த உள்ளார்கள்.

17.01.2023–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் "நூறு பூக்கள் மலரட்டும்" என்னும் கவியரங்கத்தினைத் தொடங்கி வைக்க உள்ளார்கள். கவிஞர் கலாப்ரியா அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சேலம் ஆர். குப்புசாமி அவர்கள் "கவிதை இயல்" குறித்து உரையாற்றவும் டாக்டர் ஜெய. ராஜமூர்த்தி அவர்கள் முன்னிலையுரையாற்றவும் உள்ளனர். இதனைத் தொடர்ந்து நடைபெறும் "கவிதை வாசிப்பு" என்னும் நிகழ்வில் 50 கவிஞர்கள் கவிதை வாசிக்க உள்ளனர்.

மாலை 6 மணியளவில் சென்னை கலைக்குழு வழங்கும் 'கனவுகள் கற்பிதங்கள்' மற்றும் திருமதி ரோகிணி அவர்கள் நடிக்கும்"வீழோம்" என்னும் ஓராள் நாடகம் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளன.

அனைத்து நாள் நிகழ்ச்சிகளையும் கண்டுகளிக்கத் தமிழறிஞர்களையும், கலை ஆர்வலர்களையும், பொது மக்களையும் வருக, வருக, என வரவேற்கிறோம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in